கடந்த இதழ்கள்

# ஓர்முகம் நேர்முகம்



அடிப்படையில், ஓவியரான உங்களுக்கு எழுத்திலும் இயங்கும் விருப்பம் எப்படி உருவாயிற்று?

என்னுடைய அப்பாவின் தங்கைமகன் கவிஞர் ப.இராஜேஸ்வரன் என்னைவிட பதினைந்து வயது மூத்தவர். தமிழில் மிகுந்த இலக்கியப் புலமை கொண்டிருந்தவர். அவர் சேகரித்து வைத்திருந்த மூன்று பெட்டி புத்தகங்கள்தான் என்னை இலக்கியவாதியாக்கியது. ஓவியரான என் தந்தையாரின் பாதிப்பினால் முதலில் ஓவியங்கள் மட்டுமே தீட்டி வந்த நான் எழுத்திலும் இயங்க ஆசை கொண்டேன்.

படைப்பாளியாகிய நீங்கள் கலை விமர்சகராகவும் ஆகவேண்டிய தேவை எவ்விதம் வந்தது?

மும்பையில் நான் வாழ்ந்த காலங்களில் எந்த ஆங்கில இதழைப் பிரித்தாலும் வடநாட்டு ஓவியர்கள், சிற்பிகள் பற்றிய கட்டுரைகள் வெளிவருவது எனக்கு ஏமாற்றம் அளித்தது. எனக்குத் தெரிந்த ஏராளமான தமிழகத்து ஓவியர்கள் பற்றி ஒரு கட்டுரைக்கூட வராதது கண்டு கோபம் கொண்டேன். இதன் விளைவாகத்தான் ஆங்கிலத்தில் தமிழ்நாட்டு ஓவியர்கள் பற்றிய கட்டுரைகளை Times of India, Economoc Times ஆகிய இதழ்களில் எழுதத் தொடங்கினேன்.

கவிதையில் தொடர்ந்து இயங்க முடியாதது ஏன்?

கவிதை எழுதுவது என்பது ஒரு மரம் வளர்வது போல, ஒரு செடி மலர்வது போல இயல்பாக என்னோடு நிகழ்ந்துகொண்டே இருக்கிறது. ஆனால், நான் எழுதும் கவிதைகளை உடனுக்குடன் பத்திரிகைகளில் அனுப்பும் பழக்கம் இல்லாதவன் நான். மேலும் ஒரு மொழிபெயர்ப்பாளன் என்று பெயர் பெற்றுவிட்ட என்னிடம் "ஒரு நல் மொழி பெயர்ப்பு கவிதை கொடுங்க சார்" என்று பத்திரிகையாளர்கள் கேட்கிறபோ எனக்குள் இருக்கும் கவிஞன் கொஞ்சம் வேதனைபடத்தான் செய்கிறான்.

உங்கள் கவிதையின் இயங்குதளம் என்னவாக இருக்கிறது?

என் கவிதையின் தளம் பெரும்பாலும் நகரம் சார்ந்த அனுபவம்தான். நகர வாழ்க்கையில் காணப்படும் பாதாள சாக்கடைகள், நியான் விளக்குகள், சிக்னல் விளக்குகள், மின்சார ரயில், ஆகாய விமானப் பயணம் என்று பல்வேறு தொழில்நுட்ப மயப்படுத்தப்பட்ட மனித வாழ்க்கை என் கவிதைகளில் பதிவு பெறுகின்றன. அண்மையில்கூட, இரவுதோறும் என் நாற்பதடி தெருவுக்கு ஓய்வெடுக் வருகிற 'தார் உருக்கும் இயந்திரம்' பற்றி ஒரு கவிதை எழுதி இருக்கிறேன்.

கொழுத்த அதன் இரும்புத் தசைகள்
நிலவில்
தினந்தோறும் குளிரும்

என்று ஒரு இயந்திர அழகியலை நான் ஸ்தாபிக்க விரும்புகிறேன்.

ஒரு மலரை ரசிப்பது போல, ஒரு தார் உருக்கும் இயந்திரத்தையும், விமானத்தையு பேருந்தையும், தொலைக்காட்சிப் பெட்டியையும் ரசிக்கிற தற்கால அழகியல் எனது கவிதைக்கு பிடித்தமான பகுதி. நகர வாழ்க்கையில் மனித உறவுகள் காலில் இட்டு துவைக்கப்படுவதைப் பார்த்து என் மனம் பதறுகிறது. எனது கவிதை இவற்றை பேசுகிறது.

தமிழ் படைப்பின் போதாமையை இட்டு நிரம்பும் முயற்சியாக, உங்களின் மொழிபெயர்ப்புப் பணியைக் கூறலாமா

தமிழ்ச் சமூக அமைப்பில் இருக்கும் அவலங்களை பார்க்க நேருகிறபோதெல்லாம் அதேபோன்ற பிரச்னைகளை பிறநாடுகளில் எப்படி சந்திக்கிறார்கள் என்று நான் எனது வாசகர்களுக்கு காட்ட நினைக்கிறேன். இதன் விளைவுதான் எனது மொழி பெயர்ப்புக் கவிதைகள். உதாரணமாக, தலித்துகளின் அவல நிலையைப் போன்ற ஒரு துயரமான நிலையில் வாழ்ந்த கருப்பர்கள் அதை எப்படி எதிர்கொண்டார்கள் என்பதைக் காட்டுவதன் மூலமாக தலித் எழுச்சிக்கு என்னால் உதவ முடியும் என்று நினைத்ததால்தான் 'அறைக்குள் வந்த ஆப்பிரிக்க வானம்' மொழிபெயர்ப்பை செய்தேன்.

மராட்டி, குஜராத்தி மொழிகளில் தலித் இலக்கியம் எப்படி உருவாகி உள்ளது என்பதை அறிந்துகொண்டு அதை தமிழில் உள்ள தலித் இலக்கியத்தோடு ஒப்பிட்டு படிப்பதற்காக 'பிணத்தை எரித்தே வெளிச்சம்' நூலினை வெளியிட்டேன்.

தமிழக மக்கள் பண்பாட்டு தளத்தில் சந்திக்கும் பிரச்சினைகளை பிற மூன்றாம் உலக நாடுகள் எவ்வாறு எதிர்கொள்கின்றன என்பதை காட்டுவதற்காக 'பசித்த தலைமுறை நூலினை வெளியிட்டேன். தற்போது பிலிப்பைன்ஸ் நாட்டின் இலக்கியங்களை தொகுத்து நூலாக கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளேன்.

'அறைக்குள் வந்த ஆப்பிரிக்க வானம்' நூலில் இடம் பெற்றுள்ள ஒரு கவிதையில் டேவிட் டயோப் எழுதுகிறான். "உனது உடம்பிலிருந்து எழுகிற வாசனை எனது மூக்கில் ஒரு கஞ்சாப் புகையைப் போல ஏறுகிறது" என்று. இந்தக் கவிதையை தொகுப்பில் சேர்த்ததற்கு காரணமே, தற்கால தமிழ்க் கவிஞர்கள் மூக்கினால் நுகரும் புலன் உணர்வை பதிவு செய்வதே இல்லையே என்கிற ஆதங்கம்தான். தமிழ்க் கவிதைகளில் பெரும்பாலானவை கண்ணால் காண்கிற காட்சி விவரிப்புகளே. தொடு உணர்ச்சி ரீதியிலான உணர்வுகள்கூட அதிகமாக பதிவாவது இல்லை. மூக்கினால் உணரும் திறன் தமிழனுக்கு 'கூந்தல் மணம்' பற்றிய ஆராய்ச்சிக்குப் பிறகு

அளவுக்காவது இவர்கள் பங்களித்திருக்கிறார்களா?

சாந்திநிகேதனில் கல்வி கற்று, தாகூர் காலத்தில் சாந்திநிகேதனில் ஆசிரியராக பணிபுரிந்த தமிழகத்து ஓவியர் ஆ.பெருமாள் போன்ற மேதைகளை மேற்பெ சான்னவர்கள் யாராவது கண்டு கொள்வார்களா?

இன்றைய கலை விமர்சனம் என்பது தமிழ்ச் சூழலைப் பொருத்தவரை அது ஆங்கிலத்தில் எழுதப்பட்டாலும் தமிழில் எழுதப்பட்டாலும் அந்த ஓவியர் குறித்த ஒரு விளம்பரக் குறிப்பாகத்தான் இருக்கிறதே தவிர, அழகியல் ரீதியான ஆராய்ச் சியாக இல்லை. இதற்கு காரணம், கலை விமர்சகர்கள் தனக்கு எந்தவிதமான பலன் கிடைக்கும் என்று எதிர்பார்த்து ஏங்குகிறார்கள்.

தமிழக ஓவியர்கள், சிற்பிகள் பற்றிய உங்களின் பொது மதிப்பீடு?

தமிழகத்தை பொறுத்தவரை ஓவியர்கள், சிற்பிகளில் திறமையானவர்கள் ஏராளம். வண்ணங்களை கையாள்வதில், உருவங்களை வடிப்பதில் மிகவும் கைதேர்ந்தவர்கள். ஆனால், ஓவியத்தைப் பற்றிய சித்தாந்தம், தத்துவார்த்தமான பார்வை இவர்களிடம் இல்லை. வெறும் மேல்நாட்டு மோஸ்தர்களைப் பார்த்து இயங்கும் வான்கோழித்தன மலிந்து இருக்கிறது.

ஓவியர்கள் தொழில் தேர்ச்சியில் கவனம் செலுத்துகிறார்களே தவிர, கலை குறித்த த்துவார்த்தமான தேடல்களிலும் ஈடுபட வேண்டும்.

அடுத்ததாக, தமிழக ஓவியர்களின் சமூக அக்கறை என்பது மிகவும் கேள்விக்குறியது. பணக்காரர்களின் வீட்டு வரவேற்பறைகளை அலங்கரிப்பது மட்டுமே இவர்களது குறிக்கோள். மக்களுக்கும் இவர்களுக்குமான தொடர்பு என்ன? தமிழகத்தில் பெரும்பாலான ஓவியர்கள் கிராமங்களிலிருந்து வந்தவர்களாக இருந்தும், இவர்கள் எப்படி திடீரென மக்களிடமிருந்து அந்நியப்பட்டு போனார்கள்.

'கலை இரவு'கள் மூலமாக மக்களோடு இணைந்து ஓவிய முயற்சிகளில் ஈடுபடுகிறார்களே...?

மக்களுக்கு எதிரில் வந்துநின்று ஒரு விழாவில் தங்களது ஓவியத்தை தீட்டிக் காட்டுவதாலேயே அது மக்களுக்கான ஓவியம் என்று சொல்ல முடியாது. மக்களிடமிருந்து கற்று மக்களுக்கே திருப்பி தரும்படியான ஒரு ஓவிய முயற்சியைத்தான் மக்கள் ஓவியம் என்று கூற முடியும். அதுதான் மக்களின் குரலாகவும் இருக்கும்.

சாந்தி நிகேதனில் ஓவியர் ஆ.பெருமாள் வங்காளத்தில் உள்ள சாந்தாள் மலை இன மக்களின் கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள குடிசை சுவர்களில் எந்தவித விளம்பரத்துக்கும் அல்லாமல் ஓவியம் தீட்டினார் என்றால், அதுதான் மக்களுக்கான ஓவியம். "ஓவியத்தை ரசிப்பதற்கு மலையின மக்களுக்குத் தெரியாதே" என்று அவரிடம் கேட்டதற்கு, அவர் சொன்னார், "பல் துலக்கும் குச்சியை வாயில் வைத்த படி அதை ரசித்தார்கள்" என்று.

தமிழகத்தில் 'கலை இயக்கம்' தோன்றாததற்கு என்ன காரணம்?

ஒரு எழுத்தாளன் சக எழுத்தாளனை எவ்வளவு முரண்பட்டாலும் சிறப்பிக்கும் போக்கு இருக்கிறது. ஆனால், ஓவியர்களுக்குள் அது இல்லை. ஒவ்வொரு ஓவியனும் தான் மட்டுமே சிறந்த ஓவியன் என்று கருதுகிறான். அதனால்தான் மாபெ பரும் கலை இயக்கம் தோன்றவில்லை.

உங்களுக்கு இன்னும் விருதுகள் வழங்கப்படாதது பற்றி...?

விருதுகள் கொடுக்கப்படுவதில் உள்ள சரி அல்லது தவறுகள் பற்றி எனக்கு அக்கறை இல்லை. விருதுகளை எதிர்பார்த்து இயங்கிக் கொண்டிருப்பேன் என்றால், நான் என்றைக்கோ கலை இலக்கிய விமர்சனத்தை கைவிட்டிருப்பேன். தமிழனின் இலக்கியத்தை நிர்மாணித்துக் கொடுத்த் உ.வே.சாமிநாத ஐயரும் விருதுகளை நினைத்து ஏங்கவில்லை.

சந்திப்பு: சூரியசந்திரன்

போய்விட்டதோ என்று தோன்றுகிறது.

உங்கள் மொழிபெயர்ப்புகள் தமிழ் சூழலில் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தி இருக்கிறது?

பிற மொழியில் எழுதப்பட்டது என்பதாலேயே ஒன்றை நான் மொழிபெயர்க்க முயற்சிப்பதில்லை. நமது வாசகர்களின் சுண்டு விரலையாவது சீண்டக்கூடிய ஒரு த குதி இல்லையென்றால் நான் அதை மொழி பெயர்ப்பதில் ஈடுபடுவது இல்லை. நான் மொழி பெயர்க்கிற படைப்புகள் வாசக தளத்தில், சமூக உணர்வில், ஒரு அதிர்வையாவது ஏற்படுத்த வேண்டும் என்று கருதுகிறேன். அதனால்தான், தமிழின் எழுத்தாளர்களைக் காட்டிலும் ஏதோ ஒருவிதத்தில் மேன்மையான எழுத்துக்களைத்தான் தேர்வு செய்து மொழி பெயர்க்கிறேன்.

இன்றைக்கு 'அறைக்குள் வந்த ஆப்பிரிக்க வானம்' நூலை பாதிக்காத இளம் த லைமுறை எழுத்தாளர்களே இல்லையென்று சொல்லலாம். அந்த அளவுக்கு அந்நூ வெற்றி பெற்றிருப்பதற்கு காரணம், என்னுடைய கவனமான தேர்வுதான்.

உங்கள் மொழிபெயர்ப்பில் காணப்படும் தீவிர அரசியலை உங்களது சொந்த கவிதைகளில் காணமுடியவில்லையே ஏன்?

என்னுடைய உண்மையான வாழ்நிலையைத்தான் எனது வார்த்தைகளில் கவிதைகளாக வழங்க முடியும். பொய்யாக கவிதைகளில் சாமியாட எனக்கு விருப்பமில்லை இதன் பொருள், எனது கவிதைகள் சமூக அக்கறை அற்றவை என்பதல்ல. கவிஞன் அதுவும் குறிப்பாக தமிழகம் போன்ற ஒரு மூன்றாம் உலகத்து கவிஞன் சமூக கடமையை கூடுதலாக தன் தோளில் சுமக்கிறான். சமூக அக்கறை இருக்க வேண்டாத அளவுக்கு எந்தஒரு கவிஞனும் ஏதோ ஒரு வானத்தில் இருந்து குதித்து விட்டவன் அல்ல.

உங்கள் ஓவியங்கள் பற்றி சொல்லுங்களேன்....?

என்னுடைய ஓவியங்களில் பெரும்பாலனவை அக்ரலிக் வண்ணத்தில் ஓவியக் கத்தியின் மூலமாக படைக்கப்படுபவை. பெரும்பாலும், மனித வடிவங்கள், விலங்குகள் ஆகியவற்றின் உடல்சார்ந்த மொழியை ஆதாரமாகக் கொண்டு இயங்குபவை. அரை அரூப நிலையில் பதிவு செய்யப்படுபவை. கோட்டோவியங்கள், வடிவங்களின் சாரமாக எது இருக்கிறதோ அதனை ஒரு சில கோடுகளின் மூலமாக சாதிக்க ஆசைப்படுபவை.

உங்கள் ஓவியங்களை புத்தகங்களில் மட்டுமே காணமுடிகிறது. அரங்கத்தில் காட்சிப்படுத்துவதில்லையே ஏன்?

கவிதைகளை எப்படி தொடர்ந்து எழுதி வருகிறேனோ, அதுபோல ஓவியங்களையு நான் தொடர்ந்து செய்து வந்துகொண்டே இருக்கிறேன். ஆனால், கலைவிமர்சகன் என்று பெயர் பெற்று விட்டப்பிறகு, எனது ஓவியப் படைப்புகளை வெளியிடுவதில், காட்சிப்படுத்துவதில் எனக்கு ஒருவிதமான தயக்கம் ஏற்பட்டது. ப்ரான்ஸ், பிரேசில் போன்ற நாடுகளில் என் ஓவியங்கள் கண்காட்சிகளில் பங்கெடுத்துக் கொண்டிருக்கின்றன. விரைவில் சென்னையில் கண்காட்சி வைப்பதில் ஆசை கொண்டுள்ளேன்.

நீங்களே ஒரு கலை விமர்சகராக இருந்தபோதிலும், பொதுவாக கலை விமர்சனச் சூழல் எப்படி இருக்கிறது?

மிகவும் பலவீனமாக இருக்கிறது. விட்டல்ராவ், தேனுகா, சா.கந்தசாமி, ந.முத்துசாமி, எஸ்.குரு போன்றவர்கள் ஓவிய விமர்சனத்தில் ஈடுபடுகிறார்கள். இவர்களில் த மிழனின் பாரம்பரிய ஓவிய சிற்ப மரபுகளைப் பற்றியும், அவை நமது தற்கால கலைகளின் மீது கொண்டிருக்கும் தாக்கம் பற்றியும் அக்கறை கொண்டவர்கள் மிகவும் குறைவு. சா.கந்தசாமி லலித் கலா அகாடமியினால் ஒரு விமர்சகர் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டு என்றைக்கு விருது பெற்றாரோ அன்றைக்கே கலைவிமர்சனம் எழுதுவதையே மூட்டை கட்டிவிட்டார்.

மேற்சொன்னவர்களில் மயிலை சீனி.வேங்கடசாமி போன்றவர்கள் ஆராய்ச்சிபூர்வமாக மரபு கலைக்கு அளித்த பங்களிப்பில் ஒரு சிறு குன்றிமணி